**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.05/2024 இன் அ.வ.எண்.385/2015**

1) பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினம், நஞ்ச கொல்லன் வீதி, கதவு எண் 19A/1–ல் வசிக்கும் சுமார் 53 வயதுடைய செகமலையப்பகவுண்டர் மகன் திரு.S.நாகராஜ்.

2) P.சுப்பைய செட்டியார் (இறந்தார்)

3) S.மாணிக்கம்மாள் (இறந்தார்)

... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினம், துபகவுண்டர் வீதி, கதவு எண் 19/42–ல் வசிக்கும் சுமார் 54 வயதுடைய திருமலைசாமி மகன் திரு.T.சந்திரசேகரன்.

2) பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினம், துபகவுண்டர் வீதி, கதவு எண் 19/42–ல் வசிக்கும் சுமார் 49 வயதுடைய சந்திரசேகரன் மனைவி திருமதி.C.ஈஸ்வரி.

3) பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினம், துபகவுண்டர் வீதி, கதவு எண் 19/42–ல் வசிக்கும் சுமார் 84 வயதுடைய சுப்பையகவுண்டர் மகன் திரு.S.திருமலைசாமி.

4) பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினம், துபகவுண்டர் வீதி, கதவு எண் 19/42–ல் வசிக்கும் சுமார் 79 வயதுடைய திருமலைசாமி மனைவி திருமதி.T.பெரியபாப்பாத்தி.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

நீதிமன்ற ஆணையர் மீண்டும் வழக்கு ஏ அட்டவணை சொத்தை 31.05.1999 தேதியிட்ட கிரயப்பத்திரப்படி நில அளவையர் உதவியுடன் மறுபார்வையிட்டு, அளந்து, அதன் பௌதீக தன்மை குறித்தும் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய கோரி உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 26, விதி 9–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 23.09.2024.

இம்மனுவானது கடந்த 08.01.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.V.மதிசேகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.ஹரிபிரசாத் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவில், 1–ம் மனுதாரர்/1–ம் வாதி ரூ.2,000/–ஐ எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வரும் 26.02.2025 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சம் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. |

## சொத்துவிபரம்

**'A' செட்யூல்**

பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் ஊர்க்கட்டில் 718/2 நெ. காலை புதிய எண் 1864/21 நத்தத்தில், மஞ்சக்கொல்லன் வீதி, 5 வது வார்டு, கிழமேல் ரோட்டிற்கும் வடக்கு சின்னையகவுண்டர் வீட்டுக்கும் திருமலைசாமி வீட்டிற்கும் தெற்கு,

பழனிச்சாமி வீட்டுக்கும், தென்வடல் பொது மதில் சுவற்றுக்கும் மேற்கு, சுப்பு செட்டியார் வீட்டுக்கும் தென்வடல் பொது மதில் சுவற்றுக்கும் கிழக்கு, இதன் மத்தியில் கிழபுறம் தென்வடலடி 25, மேல்புறம் தென்வடலடி 21, கிழமேலடி இருபுறமும் 53, இந்த அளவுள்ள இடமும் அதில் கிழக்குப் பார்த்து கட்டப்பட்டுள்ள தார்சு வீடும், அதைச் சார்ந்த கதவு நிலவு கட்டுக்கோப்பு மின் இணைப்பு எண் 03-326-008-1189 குடிநீர் இணைப்பு டெபாசிட் தொகை மாமூல் வழிதட பாத்தியங்களும் சகிதம்.

**'B' ஷெட்யூல்**

பொள்ளாச்சி வட்டம், கோட்டுர் மலையாண்டிபட்டினம் ஊர்க்கட்டில், கோட்டுர் பஞ்சாயத்து போர்டு லிமிட்டில் 3 வது வார்டு 73 நெ வீட்டிற்கு செக்குபந்தி

சுப்பையகவுண்டர் வீட்டுக்கும் புறவடைக்கும் தெற்கு,
மயிலாத்தாள் தில்லையப்பன் இவர்கள் வீட்டு புறவடைக்கும் மேற்கு,
கிழமேல் வீதிக்கு வடக்கு, தென்வடல் வீதிக்கு கிழக்கு. இதன் மத்தியில் தென்புறம் கிழமேலடி 42 1/2 அடி, தென்வடல் மேல்புறம் 21 அடி, தென்வடல் அடி கிழபுறம் தெற்கோட்டில் 20, பின்பு வடபுறம் தென்வடல் 41 அடி, இதில் உள்ள 4 விட்டம் 3 அங்கன தெற்கு வாசல் மேற்கு வாசல் வீடுகளும் கிழபுறமுள்ள புறவடையும் சகிதம். மற்றும் மாமூல் வழிதட பாத்தியங்களும் சகிதம். மேற்படி சொத்து தற்போதைய சப்டிவிசன்படி நத்தம் புதிய எண் 1864/20. தம்பாக்கவுண்டர் வீதிக்கு கட்டுப்பட்டது.

இவ்வுத்தரவு, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒப்பம்/- (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-------------------------------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

இ.ம.எண்.05/2024 இன் அ.வ.எண்.385/2015

நாள் : 13.02.2025

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.

பொள்ளாச்சி.

-------------------------------------------------------